# மாலை முரசு

பக்கங்கள் 17

## கட்டடத்தில் இருந்து கீழே விழுந்து ஊழியர் மரணம்

நுவரெலியாவில் புதிதாக நிர்மாணிக் கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த ஊழியர் கட்டடத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு அந்தக் கட்டடத்தின் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 07 ஞாயிற்றுக்கிழமை 24.09.2023 அதிர்வு 55

## கொடிகாமத்தில் இருந்தும் திலீபனின் ஊர்திப் பவனி ஆரம்பம்

(தென்மராட்சி நிருபர்)

தியாக தீபம் திலீபனின் மற்றுமொரு ஊர்திப் பவனி யாழ்ப்பாணம், தென்மராட்சி, கொடிகாமம் பகுதியில் இருந்து இன்று காலை ஆரம்பமானது.

இந்த ஊர்திப் பவனி கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி, பூநகரி, முழங்காவில், மன்னார், வவுனியா ஊடாகப் பயணித்து கிளிநொச்சியை வந்தடைந்து நாளைமறுதினம் யாழ். நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை வந்தடையவுள்ளது.

தாயக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இந்த ஊர்திப் பவனி முன்னெடுக்கப் படுகின்றது.





## நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாடு திரும்பியுள்ளார்.

டுபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஈ.கே. 650 விமானம் மூலம் காலை 8.30 மணியளவில் அவர் நாடு திரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 04▶

## அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்

### கெஹலியவிடமிருந்து சுகாதார அமைச்சை பிடுங்கியெடுத்து பத்திரணவுக்கு வழங்க முடிவு





நான்கு அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளை மாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய சுகாதார அமைச்சுப் பதவியில் மாற்றம் செய்யப் படவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. 04▶

## கணவனை கத்தியால் குத்தி படுகொலை செய்த மனைவி

### நுவரெலியாவில் பயங்கரம்




நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜிதபுர பகுதியில் தனது கணவரை மனைவி கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். 04▶

## ஓட்டோ - பஸ் விபத்தில் இருவர் பரிதாபச் சாவு!

### மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



தம்புள்ளை – குருநாகல் பிரதான வீதியின் கலேவெல பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று பஸ்ஸுடன் மோதி பயங்கர விபத்து இடம்பெற்றுள்ளது.

இன்று காலை 6 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 04▶

# கார்கிள்ஸில் தாக்குதல் சம்பவம்: சந்தேகத்தில் ஐந்து பேர் கைது!



கொழும்பு பொரளை பகுதியிலுள்ள பிரபல தனியார் சுப்பர் மார்க்கெட் ஒன்றுக்கு வந்த பெண் வாடிக்கையாளர் ஒருவர் அங்குள்ள ஊழியர்களால் கொடூரமாக தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்பொருள் அங்காடி ஒன்றில், பெண் வாடிக்கையாளர் ஒருவர் கொடூரமாக தாக்கப்படும் காணொளி ஒன்று, சமூக ஊடகங்களில் வைரலானதை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

ஹன்வெல்ல பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. எனினும், சம்பவம் பொரளையிலுள்ள விற்பனை நிலையமொன்றில் இடம்பெற்றுள்ளது என்று பின்னர் தெரியவந்துள்ளது.

விற்பனை நிலையத்திலிருந்த ஆண் மற்றும் பெண் ஊழியர்கள் இணைந்தே, குறித்த வாடிக்கையாளரை கொடூரமாக தாக்குவது, அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் செப்டம்பர் 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. எனினும், சமூக ஊடகங்களில் காணொளி வைரலாகும்வரை சம்பவம் தொடர்பில் முறைப்பாடு எதுவும் பொலிஸில் பதிவாகவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொரளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாணின் விலையை குறைக்கத் தீர்மானம்!



எதிர்வரும் காலத்தில் ஒரு இறாத்தல் பாணின் விலையை 100 ரூபாவாக குறைக்க எதிர்பார்த்துள்ளார் என்று அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இந்த விலை குறைப்புத் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்வேறு வகையான வரிகள் மற்றும் டொலரின் பெறுமதி காரணமாகப் பேக்கரிப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

ஒரு பாணின் விலையை 100 ரூபா அல்லது அதற்கும் குறைவாகப் பேணுவதே தமது சங்கத்தின் ஒரே நம்பிக்கை.

அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் முயற்சியின் கீழ் எதிர்காலத்தில் அரசுடன் பேச்சு நடத்திச் சுமார் 100 ரூபாவுக்கு ஒரு இறாத்தல் பாணை வழங்க ஏற்பாடு செய்யவுள்ளது.

அரசு தலையிட்டால் நிச்சயமாக 100 ரூபாவுக்கு ஒரு இறாத்தல் பாணை வழங்குவதுடன் ஒரு பணிஸின் விலையில் 10 அல்லது 15 ரூபாவை குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாட்டிலிருந்து தப்பிக்க முயன்ற நால்வர் கட்டுநாயக்கவில் கைது

இலங்கையை விட்டுத் தப்பிச் செல்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றத்தால் விமானப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள மூவரும், இலங்கை கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற சிப்பாய் ஒருவரும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்துள்ளனர்.

நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் சோதனையிட்ட குடிவரவு அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் வென்னப்புவ உதசிரிகம பொலிஸ் பிரிவில் வசிக்கும் 49 வயதான சுஜீவ பிரசன்ன பெர்னாண்டோ என்பவர் தனது மகளை துஷ்பிரயோகம் செய்துவிட்டு இத்தாலிக்கு தப்பி செல்ல முயற்சித்த நிலையில் கைது செயயப்பட்டுள்ளார்.

இந்த நபர் இத்தாலியில் வாழ்ந்து வரும் நிலையில் சமீபத்தில் ஒரு சிறிய விடுமுறைக்காக இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

மேலும், மன்னார் சிலாவத்துறை நீதிவான் நீதிமன்றம், நீர்கொழும்பு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் இலங்கை கடற்படையினரால் விமானப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்த மூவர், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போது, குடிவரவு அதிகாரிகள் மற்றும் விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# சீருடைத் துணி வழங்க செலவை ஏற்றது சீனா!

நடப்பு வருடத்திற்கான பாடசாலை மாணவர்களுக்கான சீருடை துணிகளை சீன அரசு வழங்கியிருந்த நிலையில் அடுத்த வருடத்துக்கான சீருடை துணிகளுக்கான செலவை சீனா ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த தகவலை கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு 70 வீதமான பாடசாலை சீருடைகளை சீன அரசு வழங்கியிருந்தது.

இந்த நிலையில், அடுத்த ஆண்டுக்குத் தேவையான பாடசாலைச் சீருடைகளையும் வழங்க சீனா இணங்கியுள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# நாட்டின் அபிவிருத்திக்கு உகந்தவாறு கனிய வளங்களைப் பயன்படுத்த முடிவு

## வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ

இந்த நாட்டின் அபிவிருத்திக்காக அதற்கு ஏற்றவகையில் கனிய வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

கனிய வளங்களை பாவனை செய்து மேற்கொள்ளும் உற்பத்திகளுக்கு உயர் பெறுமதியை வழங்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுரைக்கமைய இந்த நாட்டின் அரச நிதியில் இயங்கி வந்த அரச நிறுவனங்களை சுய உற்பத்தித் திறனுடன் இயங்கும் நிறுவனங்களாக மாற்றி வருகின்றோம்.

உலகின் பிரதான கடற்கரைப் பரப்பை கொண்டுள்ள நாடு என்ற வகையில், இயற்கை அழகும், இயற்கை வளங்கள் நிறைந்ததுமான இந்நாட்டின் கடற்கரைகள் காணப்படுகின்றன.

இவ்வாறான கரையோரங்களில் கடல் அரிப்பு நிகழும் போது அந்த பிரச்சினைக்கு அரச நிதியில் தீர்வுகளை வழங்கிவந்த கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் தற்போது சுற்றுலாத்துறையுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மறு முனையில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்துடன் சிறு மற்றும் மத்திய பரிமாண, பாரிய விடுதிகள் முரண்பாடுகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தன. அந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயங்களில் அரச தலையீடு செய்து நீண்டகாலம் காணப்படும் கட்டடங்களில் கட்டாயமாக அகற்ற வேண்டியவைகளை அகற்றவும், சுற்றுலாத்துறை முன்னேற்றத்துக்கு உதவுவோருக்கு அவசியமான உதவிகளை வழங்கவும் தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் அமெரிக்கா , ஆஸ்திரேலியா, மாலைதீவுகளில் கடற்கரை வளம் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இலங்கையின் கலாசாரத்துக்கு இணங்க நாமும் அந்த செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அத்தோடு கடற்கரை வலயங்களை கலாசார நிகழ்வுகள், சிறுவர் நிகழ்வுகள் உள்ளிட்ட விடயங்களுக்காகவும் நாம் வழங்குகிறோம். அதனால் திணைக்களத்துக்கும் திறைசேரிக்கும் குறிப்பிட்டளவு வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும்.

எமது நாட்டின் மிக அழகிய 24 கடற்கரைகளை தற்போது பெயரிட்டுள்ளோம். அதேபோல் நீண்ட கால வேலைத் திட்டங்களுக்காக, முதலீட்டு ஊக்குவிப்புச் சபை, காணி அமைச்சு உள்ளிட்ட தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நாட்டின் முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய முதலீட்டாளர்களுக்கு கடற்கரை வலயங்களை முதலீட்டுக்காக பெற்றுக் கொடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

அதனால் கடற்கரை பாதுகாப்புக்கு மேலதிகமாக கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் சுற்றுலாத்துறை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம்.

எமது கடற்கரைகளில் இல்மனைட் போன்ற கனிய வளங்கள் உள்ளன. தற்போது இந்திய நிறுவனமொன்று தென் மாகாணத்தில் கனிய வளங்கள் மீதான முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது. அந்த பணிகள் நாட்டில் சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் சுற்றாடல் திணைக்களம், புவிச்சரிதவியல், அளவை சுரங்கப் பணியகம், காணி அமைச்சு, முதலீட்டு ஊக்குவிப்புச் சபை ஆகியவைகளுடன் இணைந்து அந்த பணிகளை முன்னெடுக்கவுள்ளோம்.

ஒரு நாடு என்ற வகையில் எமது வளங்களுக்கான பெறுமதி சேர் செயற்பாடுகளைச் செய்யத் தவறியுள்ளோம். அதனால் மதிப்புயர்வு ஏற்படுத்துவதற்கான நிறுவனங்கள் நாட்டில் நிறுவப்பட வேண்டும். அதேபோல் கரையோரப் பாதுகாப்பு அதிகார சபையையும் வருமானம் ஈட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதற்கான பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். அதனால் சாதகமான பல வேலைத் திட்டங்களை முன் னெடுக்க முடியும் என நம்புகிறோம்.

ஸ்ரீ லங்கன் விமான சேவையை மதிப்பாய்வு செய்யும் போது, கவலைக்குரிய நிலைமை காணப்படுகின்றது. அதனால் அதனை மறுசீரமைக்கவும் முதலீட்டாளர்களை தேடிக்கொண்டிருக்கிறோம். தொழிற்சங்களும் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளன, கொழும்பு ஹயார்ட் ஹோட்டலை தற்போதைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு மக்கள் பணம் பெருமளவில் செலவிடப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களை அவ்வண்ணமே பேணினால் பெருமளவான நட்டம் ஏற்படும்.

அதேநேரம் கொழும்பில் முதலீடுக்கான வழங்கப்படும் எந்தவொரு இடமும் ஜனாதிபதியின் அனுமதியின்றி வழங்கப்படாது என்ற கொள்கை பின்பற்றப்படுகிறது. கொழும்பு கிரிஸ் ஹோட்டல் பணத்தை பெற்றுக்கொண்டு நிர்மாணப் பணிகளை இடைநடுவில் கைவிட்டுச் சென்றுள்ளது. அதனையும் முதலீட்டாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுற்றாடல் மற்றும் கடல்வள பாதுகாப்புச் சட்டமொன்றை உருவாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. வரவிருக்கும் வரவு – செலவு திட்டத்துக்கு நெருக்கடியாக இருக்காமல் சுயாதீனமாக செயற்பட்டு அரசாங்கத்துக்கு மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் செயற்பட்டு வருகின்றோம். – என்றார்.

# சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபட்ட ஐந்து பேர் கைது!

திருகோணமலை மூதூர் பிரதேச கடல் எல்லைக்குள் நேற்று (23)சட்டவிரோத வலைகளை பயன்படுத்தி மீன் பிடிக்க உதவுதல், தமது கடமையை செய்ய விடாது செயற்பட்டமை தொடர்பாக திருகோணமலை கடற்படையினர் மூதூர் பிரதேச ஹபீப் நகரைச் சேர்ந்த ஐவரை கைது செய்து துறைமுகப் பொலிஸார் வசம் ஒப்படைத்துள்ளனர் என்று துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்ப்பட்டவர் பாவித்த படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுத் துறைமுகப் பொலிஸார் வசம் ஒப்படைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் முப்பது தொடக்கம் நாற்பது வயதுக்கு இடைப்பட்டவர்கள். கைது செய்யப்பட்டவர்களையும் கைப்பட்டப்பட்ட படகையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று துறைமுகப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



**தியாக தீபம் திலீபனின் மற்றுமொரு ஊர்திப் பவனி யாழ். தென்மராட்சி - கொடிகாமம் பகுதியில் இருந்து இன்று காலை ஆரம்பமானது.** (படங்கள்:- தென்மராட்சி நிருபர்)

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## அமைச்சரவையில்...

தற்போது சுகாதார அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல கடமையாற்றி வருகின்றார். அண்மையில் நாடாளு மன்றத்தில் அவருக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரே ரணை தோற்கடிக்கப்பட்டாலும் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு, தரம் குறைந்த மருந்துப் பொருள் இறக்குமதி, தரம் குறைந்த மருந்துப் பயன்பாட்டால் நோயாளிகள் பாதிப்பு எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அமைச்சர் மீது தொடர்ந் தும் சுமத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பின்னணியில் சுகாதார அமைச்சுப் பதவியை டாக்டர் ரமேஷ் பத்திரணவுக்கு வழங்க ஜனாதிபதி ஆலோசித்துள்ளார் என அறியமுடி கின்றது.

எனினும், ஜனாதிபதியின் இந்த ஆலோசனைக்கு ரமேஷ் பத்திரண இதுவரையில் விருப்பத்தை வெளி யிடவில்லை எனவும் தெரியவருகின் றது.

தற்போது வகித்து வரும் கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தான் விரும்புகின்றார் என்று ஜனாதிபதி யிடம் ரமேஷ் பத்திரண தெரிவித்துள் ளார் எனவும் அறியமுடிகின்றது.

முன்னதாக நான்கு புதிய அமைச் சர்களை நியமிக்க ஜனாதிபதி திட்ட மிட்டிருந்தார் எனவும், தற்போது அமைச்சுப் பதவிகளில் மாற்றம் செய்ய அவர் முடிவெடுத்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

## கணவனை கத்தியால்...

33 வயதுடைய பஹிதரன் சந்திர சேகரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப் பட்டுள்ளார்.

வீட்டில் வைத்து கணவன் – மனை விக்கு இடையில் நேற்று இரவு 11 மணி யளவில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் கைகலப்பாக மாறிய நிலை யில் மனைவியால் மேற்கொள்ளப்பட்ட கத்திக் குத்துத் தாக்குதலுக்கு இலக்கா கிய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேகநபரான பாத்திமா ரிஸ் வானா என்ற பெண் கைது செய்யப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கட்டடத்தில் இருந்து...

முதலாவது மாடியில் இருந்து ஊழியர் தவறி கீழே விழுந்துள்ளார் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் இரத்தின புரியை வசிப்பிடமாகக் கொண்ட 59 வயதான சுப்பிரமணியம் வடிவேலு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மரண விசாரணைகளின் பின்னர் சடலம், பிரேத பரிசோதனைக்காக நுவ ரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நுவ ரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடு திரும்பினார்...

ஜி – 77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக கடந்த 13 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க கியூபாவின் ஹவானாவுக்குப் பயணமானார்.

கியூபா விஜயத்தை நிறைவு செய்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வரு டாந்த அமர்வில் கலந்துகொள்வதற் காக கடந்த 17 ஆம் திகதி அமெரிக்கா வின் நியூயோர்க் நகரைச் சென்றடைந் தமை குறிப்பிடத்தக்கது.

## ஓட்டோ - பஸ்...

யாழ்ப்பாணத்தில் இருந்து எம்பிலிப் பிட்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்றும், ஆராச்சிக்கட்டுவ பகுதி யில் இருந்து தம்புள்ளை நோக்கி பய ணித்த ஓட்டோ ஒன்றுமே இவ்வாறு விபத் துக்குள்ளாகியுள்ளன.

உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்த வர்கள் ஆராச்சிக்கட்டு பகுதியைச் சேர்ந்த வர்களாவர்.

ஓட்டோ சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கத்தால் எதிர்த் திசையில் பயணித்த பஸ்ஸுடன் ஓட்டோ நேருக்கு நேர் மோதி யுள்ளது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

# கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு சீன அரசின் நிதி உதவியுடன் வீடுகள் அமைப்பு

## அடுத்த மாதம் ஒப்பந்தம் கைச்சாத்தாகும் என்கிறார் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசின் உதவியுடன் கட்டப்படும் 1996 வீட்டு அலகுகள் குறித்த ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

அடுத்த மாதம் சீனாவின் பீஜிங்கில் நடைபெறும் உச்சிமாநாட்டின் போது ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று அமைச்சு கூறியது.

1996 வீட்டு அலகுகளில் இந் நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 108 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பழதுறு வத்த பகுதியில் வீட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1888 வீடுகள் ஒதுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு சீன அரசு இந்த நாட்டுக்கு 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்கவுள்ளது.

இங்கு இத்திட்டத்துக்காகச் செலவிடப்படும் வரிப்பணம், காணி சுவீகரிப்புக்கான செலவு, காணி அபிவிருத்திக்கான செலவு, வடிவமைப்பு வேலைக்கான செலவு மற்றும் அடிப்படை விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான செலவு, டெண்டர் பணிக்கான செலவு மற்றும் கழிவுநீர் வசதிகளின் செலவு என்பன இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான பரிமாற்றக் கடிதத்தில் சீன மக்கள் குடியரசும் இலங்கை அரசும் கடந்த ஜனவரி 9 ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வசிப்பவர்களின் குடியேற்றப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் கோஷ்டி மோதல்களைத் தடுக்க கடுமையாகச் சட்டத்தை அமுல்படுத்துக

## ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் அரசிடம் கோரிக்கை

**(நூருல் ஹுதா உமர்)**

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அமைதியாக இருந்த முஸ்லிம் பிரதேசங்களில் மீண்டும் வன்முறைகள் தலைதூக்கி இருப்பதையே அண்மையில் நாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் நடக்கும் விடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முஸ்லிம் சமூகத்தில் தொடர்ந்து மோதல்கள் உருவாகும் வரை நாம் காத்திருக்க முடியாது. எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதற்கு மத, அரசியல், சிவில் தலைவர்கள் பாரபட்சமின்றி நடுநிலையோடு செயல்பட வேண்டும்.

நாட்டில் இடம்பெறும் பிரச்சினைகளைத் தடுக்க கடுமையான சட்டம் நடைமுறைக்கு வரவேண்டும். இதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-



கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையின் தென்மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோதலின் போது பலர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்று ஒரு வாரம் கூட ஆகாத நிலையில், கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பிரதேசத்தில் இருந்த இறைநேசர் ஒருவரின் ஸியாரம் ஒன்றும் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள், ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் அமைதியாக இருந்த முஸ்லிம் பிரதேசங்களில் மீண்டும் வன்முறைகள் தலை தூக்கி இருப்பதையே சுட்டிக்காட்டுகின்றன. முஸ்லிம் சமூகத்தில் தொடர்ந்து மோதல்கள் உருவாகும்வரை நாம் காத்திருக்க முடியாது. எனவே, இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

இந்த மோதல்களின் அடிப்படை காரணம் என்ன என்பதையும் நாம் உடனடியாக கண்டறிய வேண்டும். ஏனென்றால், கண்ணுக்குத் தெரியாத ஒரு அதிகாரபலம் அவர்களின் லட்சியங்களை நிறைவேற்றுவதற்காக நம்மைப் பிரிக்கிறது என்பது வெளிப்படையாக தெரிகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த மோதல்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக தலையிட்டு விசாரணை செய்து சட்டத்தை பலப்படுத்தி வேண்டும் என்பதே அமைதியான இஸ்லாத்தை பின்பற்றும் இலங்கை முஸ்லிம்களின் உண்மையான விருப்பமாகும்.-என்றுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எங்கே நீதி?

ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியின் படுகொலை தொடர்பான வழக்கில் பிரதான குற்றவாளியாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) சுமார் 5 ஆண்டுகள் விளக்கமறியலில் இருந்த நிலையில், ஆட்சி மாற்றத்தை அடுத்து, திடீரென பிணையில் விடுவிக்கப்பட்டமை மற்றும் வழக்கிலிருந்து முற்றாக விடுதலையானமை ஆகியவை தொடர்பில் திரை மறைவில் நடந்த விடயங்கள் என்ற பெயரில் பிள்ளையானின் முன்னாள் செயலாளர் ஆஸாத் மௌலானா வெளியிட்ட திடுக்கிடும் தகவல்கள் பெரும் பரபரப்பையும் கருத்து பரிமாற்றங்களையும் உருவாக்கி இருக்கின்றன.

அதை ஒட்டி நாடாளுமன்றத்தில் யாழ் மாவட்ட உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வெளியிட்ட தகவல்கள் சட்ட வட்டாரங்களிலும் கருத்து மோதலை ஏற்படுத்தியிருப்பது கண்கூடு.

நாடாளுமன்ற நிலையில் கட்டளைகளை மீறாமல் அந்த விடயங்களை சுமந்திரன் முன் வைத்திருக்கின்றார் என்பதை சட்ட வட்டாரங்கள் ஒப்புக்கொள்கின்றன.

ஆனால், இத்தகைய விதத்தில் நீதிபதி ஸ்தானத்தில் இருப்பவர்கள் மோசமாக விமர்சிக்கப்பட்டால் நீதி நிர்வாக முறைமையே கேலிக்கூத்தாகிவிடும், ஆகவே சுமந்திரனின் உரையைக் கண்டித்து ஆட்சேபிக்க வேண்டும் என்பது ஒரு சாரரின் வாதம். அதில் அர்த்தங்கள் இருக்கக்கூடும்.

ஆஸாத் மௌலானா சுட்டிக்காட்டி, சுமந்திரன் நாடாளுமன்றத்தில் போட்டுடைத்த விடயங்கள் அதைவிட மோசமானவை. அவற்றை சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியங்கள் மற்றும் சம்பவங்களின் அடிப்படையில் வைத்து நோக்கும் போது அவை உண்மையில் நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் உருவாகின்றது.

அவை உண்மையாக இருக்குமானால் - அப்படி நடந்திருக்குமானால் - நாட்டின் நீதி நிர்வாகம் மிக மிக மோசமான நிலைக்குத் தாழ்ந்து விட்டது என்று அர்த்தம்.

நீதி பரிபாலனத்தில் தலையிடக்கூடாது, அது சுதந்திரமாக - சுயாதீனமாக - செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை வைத்து, அதையே மூடி மறைக்கும் திரையாகவும், கவசமாகவும், கவலரணாகவும் வைத்துக்கொண்டு நீதியின் பெயரால் நீதி விரோத செயற்பாடுகள் முழு அளவில் அரங்கேறுகின்றன என்பதே நிலைமையாகிவிடும்.

ஆகவே சுமந்திரன் நாடாளுமன்றத்தில் போட்டுடைத்த விடயங்களைக் கண்டிப்பதை விட, அதில் உள்ள உண்மைத் தன்மையை ஆராய்ந்து, குற்றமிழைத்தோரை அம்பலப்படுத்தவும், இனிமேலும் அப்படி நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்தவும், முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதுவே பிரதான நோக்கமாகவும் அமைவது அவசியம்.

நீதிபதிகள் மேன்மையானவர்கள் என்ற கவசத்தை வைத்துக் கொண்டு நடக்கும் திருக்கூத்துக்களை அம்பலப்படுத்துவதும், அத்தகைய போக்கை திருத்துவதற்கான நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஆரம்ப செயற்பாடுகளை தொடங்கவும் பொருத்தமான - சரியான இடம் - நாடாளுமன்றம்தான்.

அதை சரியான களமாகப் பயன்படுத்தி ஆரம்ப புள்ளியை அடையாளம் காட்டி இருக்கிறார் சுமந்திரன். அதை விமர்சிப்பதை விடுத்து, நீதிபதிகள் நேர்மையாக நடப்பதை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை அதிலிருந்து தொடர்வதுதான் சரியானதாகும்.

# மலேசியாவில் மூன்று கொலைகள்: இரு இலங்கையர் மீது சந்தேகம்!

## கோலாலம்பூர் பொலிஸார் விசாரணை

மலேசியாவின் சென்டுல் பகுதியில் இரண்டு இலங்கையர் உட்பட 3 பேர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் அந்த நாட்டு பொலிஸார் மேலும் பல தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தொடர்பான விவரங்களையும் பொலிஸார் கோரியுள்ளனர்.

இரண்டு இலங்கையர்கள் இந்தக் கொலைகளைச் செய்திருக்கலாம் என்று மலேசிய பொலிஸார் சந்தேகிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை கோலாலம்பூர் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

சென்டுல் பகுதியிலுள்ள இலங்கை தம்பதியருக்கு சொந்தமான வீடொன்றில் 22 ஆம் திகதி இந்த கொலைகள் இடம்பெற்றுள்ளன.

அந்த வீட்டில் வாடகை அடிப்படையில் தங்கியிருந்த தம்பதியின் 20 வயதுடைய மகனும், இரண்டு இலங்கையர்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சுமார் 2 நாள்களுக்கு முன்னர் அந்த வீட்டுக்கு மேலும் இரு இலங்கையர்கள் வந்திருந்த நிலையில், அவர்கள் இந்தக் கொலைகளை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று மலேசிய பொலிஸார் நடத்திய ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில், வீட்டை சோதனை செய்த பொலிஸார், மூவரின் சடலங்களையும் மீட்டுள்ளனர். இரண்டு இலங்கையர்களின் புகைப்படங்களைப் பொலிஸார் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மலேசிய பொலிஸார் அந்நாட்டிலுள்ள இலங்கை தூதரகத்துக்கு அறிவித்துள்ளது.

# நிபா வைரஸ் நோய்த் தாக்கம் இலங்கையில் பாதிப்புக் குறைவு

## சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு

இந்தியாவில் கேரளா உட்பட பல பகுதிகளில் பரவி வரும் கொடிய நிபா வைரஸ் நோய் இலங்கைக்குள் வருவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

பன்றிகள் மூலம் இந்த நோய் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. பன்றிகளை மையமாக வைத்து நோய் கண்காணிப்பு நடவடிக்கைகளை நாட்டில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர பேராதனையில் உள்ள கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள அலுவலகத்துக்குச் சென்றார்.

இந்த நாட்டில் கால்நடை உற்பத்தி கைத்தொழில் மற்றும் பொது சுகாதாரத்துக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அங்கு கேட்டறிந்தார்.

இதன்போதே வைத்தியர் ஹேமலி கொத்தலாவல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர், நிபா வைரஸ் இலங்கைக்குள் வராமல் தடுக்க நோய் கண்காணிப்பை உடனடியாக தொடங்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும்,பறவைக் காய்ச்சல் நாடடுக்குள் நுழைவதைத் தடுப்பது போன்று நிபா வைரஸ் நாடடுக்குள் நுழையாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.



# உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையில் 2022 கல்வியாண்டில் கலைப் பிரிவில் பல்கலைக்கழக அனும திக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர் களை கௌரவிக்கும் நிகழ்வு பாடசா லையின் அதிபர் எம்.எஸ்.எம்.பைசால் தலைமையில் இடம் பெற்றது .

இந்த நிகழ்வில் பழைய மாணவிகள் சங்கத்தினரால் சிறந்த சித்திகளை பெற்ற மாணவிகளுக்கு மாலை அணி வித்தும் பணப்பரிசல்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் உயர்தரப் பிரிவு பகுதி தலைவர் யூ.எல். செய்னுலாப்தீன் மற்றும் உயர்தர பிரிவு ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர்

பின்னர் உயர்தர பிரிவில் சித்தி பெற்ற மாணவர்களை உள்ளடக்கிய புகைப்பட பதாதை திரை நீக்கம் செய்யப்பட்டது .

இந் நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர், உயர்தர பிரிவு ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவிகள், சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




# இரண்டாம் மொழியைக் கற்ற ஊடகவியலாளருக்குச் சான்றிதழ்

(எம்.ஏ.ஏ.அக்தார், ஹஸ்பர்)

சிங்களம் பேசுவோருக்கு தமிழ் மொழியில், தமிழ் பேசுவோருக்கு சிங்கள மொழியில் தேர்ச்சி பெறும் வகையில் எழுத்தாணி கலைப் பேரவை யின் தலைவர் வ. ராஜ்குமார் தலைமையில் செயலமர்வொன்று திருகோணமலை நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்தப் பாடநெறி தேசிய மொழிக் கல்வி நிறுவக வளவாளர்களால் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராய்ச்சி, திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்க தலைவர் பொ.சச்சிதானந்தம், தேசிய மொழிக் கல்வி நிறுவக உத்தியோஸ்தர்கள் ,பிரதேச ஊடகவியலாளர்கள் மற்றும் இளம் ஊடக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.





# இலக்கிய நாடகப் போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வியமைச்சு நாடு தளுவிய ரீதியில் நடத்தும் அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் மத்திய மாகாண மட்ட இலக்கிய நாடக போட்டியில் பதுளை, ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி முதலாம் இடத்தை பெற்றுத் தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.






# மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் 2023 ஆம் ஆண்டுக்கான மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் அதிபர் ஏ. எல். ஏ.ரஹ்மான் தலைமையில் மாவனல்லை இல்மா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக மாவனல்லை வலய கல்வி பணிப்பாளர் எம்.ஏ.பி.பிரியதர்சினியும்,விசேட அதிதியாக விமானப்படை அதிகாரி எம்.ஆர்.எம். ஹம்ஸ ாவும் கலந்து கொண்டனர்.

பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவியர் சங்க உறுப்பினர்கள் பெற்றோர் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை பிரதேச இலக்கியப் போட்டி

(எம். எப். நவாஸ்)

மாவட்ட கலாச்சார மற்றும் இலக்கிய போட்டி அம்பாறை பிரதேச செயலக மட்டத்தில் நடைபெற்றது.

15 தொடக்கம் 18 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கான போட்டி நிகழ்வு அக்கரைப்பற்று அல் முனவ்வரா பாடசாலையில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் எம். ஜே. எம். நிஹ்மத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி. ஜெகதீசன் கலந்து கொண்டார்.

மாவட்ட சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்களான கே. நேசராசா, எம். இஸ்மாயில், திருவாளர் குணதிலக, முகாமையாளர்களான எம். தஸ்லிம், யுகே. நளீம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ. சபாயித்தீன், ஏ. எஸ். எம். உனைஸ், எஸ் ஏ எம். அமீன், எம்.ஐ.எம். இஸ்மாயில் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கொண்டனர்.











# ‘செயல்’ குறுந்திரைப்படம் வெளியீடு!

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகக் கலை மற்றும் கலாச்சார பீட மாணவ பேரவையின் ஏற்பாட்டில் பீட மாணவர்களின் புது முயற்சியால் ‘செயல்’ எனும் குறுந்திரைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அறிமுக விழா கலை மற்றும் கலாச்சார பீட மாணவ பேரவையின் தலைவர் ஸையித் உர்பி தலைமையில் கலை கலாச்சார பீட கலையரங்கில் நடைபெற்றது. இந்தக் குறுந்திரைப்பட அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார்.

கலை மற்றும் கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம் ஐ நௌபர், பல்கலைக்கழக மாணவ நல சேவைகள் மைய பணிப்பாளர் கலாநிதி எம். றிஸ்வான், பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறை தலைவர்கள். சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக பொறியியலாளர் எம்.ஐ. பஸீல், கலை கலாசார பீடத்தினுடைய சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.அஸ்ஹர், மற்றும் நிர்வாக கல்வி சார் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், இஸ்லாமிய கற்கை மற்றும் அரபு மொழி பீட மாணவ தலைவர் மற்றும் மாணவ மாணவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



# தொழு நோயைக் கண்டறிய விசேட பயிற்சிக் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (23) தொழுநோய் தொடர்பான விசேட பயிற்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

தொழுநோய் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகளில் ஒன்றாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பியலாளர் டாக்டர் எம்.ஏ.சி.எம். பஸாலால் இவ்விசேட பயிற்சி நெறி ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொது சுகாதார மாதுக்கள் மற்றும் பொது சுகாதார மாதுக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தொழுநோயை கண்டறிவதற்கான வழிமுறைகள் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் முறைமை தொழுநோயை கட்டுப்படுத்துவதற்காக சமூக நிறுவனங்களின் பங்களிப்பை பெறுவதற்கான வழிமுறைகள் என பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.



# மாணவர்களது கல்வி நிலை தொடர்பில் கலந்துரையாடல்

(அ.அஸ்வர், அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஸாஹிறாக் கல்லூரியிலிருந்து 2024 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள தொழிநுட்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர்களுடனான கலந்துரையாடலொன்று அண்மையில் கல்லூரியின் காரியப்பர் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

தொழிநுட்பப்பிரிவின் பகுதித்தலைவர் இஸட்.ஏ. ஜின்னாவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்துக்குப் பாடவிதான மேம்பாட்டுக்குப் பொறுப்பான பிரதி அதிபர் அமீன் தலைமை வகித்தார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அண்மையில் இடம்பெற்ற முதலாம் தவணைப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் விரிவாக ஆராயப்பட்டது.

தவணைகளில் மாணவர்களின் பெறுபேறுகளை மேம்படுத்துவது, உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக நுழைவை அதிகரிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பெற்றோர் பாடசாலையுடன் தொடர்புற வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. மாணவர்கள் இரவு வேளைகளில் கல்லூரிக்கு வந்து சுயகற்றலிலும், செயன்முறைகளிலும் ஈடுபடுவதற்கான சூழல் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பிலும், அதில் பெற்றோரின் வகிபாகம் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

# சாரணர் சங்கக் கூட்டம்

(சப்னா றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் விஷேட கூட்டம் அக்கரைப்பற்று அலுவலகத்தில் இன்று (24) நடைபெற்றது. மாவட்ட ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவர் யூ.எல்.எம்.ஹாசிம் உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

சாரணர் வாரத்தை முன்னிட்டு மாவட்ட சாரணர் சங்கத்தால் முன்னெடுக்கப்படவுள்ள சாரணர் விழிப்புணர்வுச் செயலமர்வு, நட்பு மேம்பாட்டு திட்டம், இளைஞர் மற்றும் குழந்தைகள் ஒற்றுமை, பல்வேறுபட்ட மத ரீதியான நிகழ்வு, சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பு, அனர்த்த முகாமைத்துவ குழு நியமித்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டு அவற்றை செயற்படுத்தவுள்ளனர் என்றும் மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தெரிவித்தார்.



# சர்வதேச சுற்றுலா தினத்தையடுத்து மட்டக்களப்பில் சுற்றுலாப் பண்டிகை

(பழுவூரான்)

சர்வதேச சுற்றுலா தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சுற்றுலா பண்டிகை எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக வளாகத்தில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

சுற்றுலாத்துறை மேம்பாடு, போதையற்ற சமூகத்தை உருவாக்குதல், கரையோர சுத்தம் பேணல், சுயதொழிலை முன்னேற்றல் ஆகிய சமூக நல இலக் குகளை நோக்காகக் கொண்டு மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற் பாட்டில் சுற்றுலா பண்டிகை பெருவிமர் சையாக கொண்டாடப்படவுள்ளது.

மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மாவட்டத்தின் பாரம்பரியங்களை வெளிக்கொணரும் கலை கலாச்சார நிகழ்வுகள், பாரம்பரிய உணவு வகைகள், மாவட்டத்தின் சுற்றுலா தளங்கள் பற்றிய வழிகாட்டல்கள் உள்ளடங்கியதாக சுற்றுலாப் பண்டிகை இடம் பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான கடற்கரை கால்பந்து சுற்றுப்போட்டிகளும் மட்டக்களப்பு, கல்லடி கடற்கரையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சிறந்த பெண் பாடலாசிரியர் தாமரை!

தென்னிந்தியாவின் தமிழகத்தின் சினிமாத்துறையின் முதல் பெண் பாடலாசிரியாரான தாமரை சேற்றில் முளைத்த செந்தாமரை தங்கத்தாமரை என புகழப்படும் கவிஞர். இவர் கோவையில் 1965 ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி கணித ஆசிரியரான சுப்பிரமணியனுக்கும் தமிழ் ஆசிரியரான கண்ணம்மாளுக்கும் மகளாக பிறந்தார்.

இவர் கோவையில் உள்ள அரசு பள்ளி ஒன்றில் பயின்றார். தொடர்ந்து தமிழ் இலக்கியத்திலும் புத்தகங்களை படிப்பதிலும் ஆர்வம் கொண்ட இவர் எட்டாம் வகுப்பு படிக்கும் போதே கவிதைகளையும் எழுதத் தொடங்கினர். மற்றும் குமுதம், தினமலர் ஆகிய பத்திரிகைகளில் கவிதைகள் சிறுகதைகள் போன்றவற்றை எழுதி பரிசீல்களை பெற்று தமிழ் கவிதை ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். பின்னர் கோவையிலேயே பொருளியல் பட்டத்தையும் பெற்றார்.

படித்தவுடனே பிரபலமான தொழிற்சாலை ஒன்றில் உற்பத்தி துறையில் வேலையும் பார்த்தார். தன்னுடன் கூட படித்த ஒருவரை திருமணம் செய்து கொண்டார். சிறிது காலத்தின் பின் கணவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக இவரது திருமண வாழ்க்கை தோல்வியில் முடிவடைகிறது. பின்னர் கவிதை படிக்கும் அதீத ஆர்வத்தால் சென்னைக்குக் குடி பெயர்கிறார். இவர் எழுதிய கதைகள் கவிதைகள் போன்றவற்றைப் பார்த்துவிட்டுச் சினிமா துறையில் அவருக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன.

1997இல் இயக்குனர் சீமானின் 'இனியவனே' திரைப்படத்தில் தென்றல் எந்தன் அடியை கேட்டது தத்தோம் தகதோம்... என்ற பாடலோடு தொடர்ந்து தனது திரைப்படப் பாடலாசிரியர் பயணத்தை தொடர்ந்தார். தனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தாலே போதுமென்று சம்பளம் ஒன்றும் வாங்காமல் இப்பாடலை பாடினார். பின்னர் இரண்டாவதாக 'உன்னிடத்தில் என்னை கொடுத்தேன்' திரைப்படத்தில் 3000 ரூபாய் சம்பளத்துக்குத் தனது பாடல் வரிகளைப் பதிவு செய்தார்.

தாமரையின் சுவாரஸ்யமான வாழ்க்கைப் பயணத்தில் திருப்பு முனையாக இயக்குனர் கௌதம் வாசுதேவ்மேனன் இயக்கத்தில் ஹாரிஸ்யராஜ் இசையமைப்பில் 'மின்னலே' திரைப்படத்தில் பாம்பே ஜெயஸ்ரீ குரலில் இவர் எழுதிய வசீகரா... என்ற பாடல் ஹிட் கொடுத்தது. அந்தப் பாடல் இன்றுவரை மார்க்கெட்டில் குறையாத இடத்தை பிடித்துள்ளது. இது ஹரிஷ்யராஜ் திரை உலகின் இசையமைத்த முதலாவது திரைப்படம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் ஹாரிஸ்யராஜ் மற்றும் கௌதம் வாசுதேவ் மேனன் தாமரை ஆகியோரின் கூட்டணியில் இன்றும் வெற்றி வாகை சூடி வருகின்றார்கள். குறிப்பாகக் காக்க காக்க, வேட்டையாடு விளையாடு, பச்சைக்கிளி முத்துச்சரம், வாரணம் ஆயிரம், என்னை அறிந்தால் போன்ற படங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

1997 இல் தொடங்கிய இவரது பயணம் 2017 வரை இடைவெளி இல்லாத 20 ஆண்டு பயணம் வெற்றி அவர் சமூக வலைத்தளங்களில் வெளியிட்ட பதிவு ஒன்றில் திரைப்படப் பாடல்கள் எழுதும் முதல் தொழில் முறை பெண் பாடலாசிரியர் இந்தியாவிலேயே நான்தான் என்று சொல்கிறார்கள். எனக்கு முன்னும் பெண் பாடலாசிரியர்கள் இருந்தார்கள். அவர்கள் வெவ்வேறு துறைகளில் இருந்து கொண்டு எழுதியதால் இந்த பெருமையை எனக்குக் கொடுக்கின்றார்கள் என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில் பாடல் எழுத வரும் முன்பே ஆபாசமாக எழுதுவதில்லை. ஆங்கிலம் கலந்து எழுதுவதில்லை என்று உறுதியோடுதான் வந்தேன். இன்று வரை அதில் உறுதியாகத்தான் இருக்கின்றேன். அதனால் பல பாடல் வாய்ப்புகளை இழந்திருக்கின்றேன். இதற்குக் காரணம் திரைப்பட பாடல்கள் யாவும் சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் எனது பாடல்கள் சமூகத்தை கெடுப்பதாக இருந்து விடக்கூடாது என்கின்ற தனிப்பட்ட பொறுப்புணர்வு தான் என்றார்.

உரிமை போராளியும் தமிழ் தேசியவாதிமான தோழர் தியாகு என்பவரை திருமணம் செய்த இவருக்கு சமரன் என்றொரு மகனும் உள்ளார். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கணவன் 2014 நவம்பரில் பிரிந்து செல்கின்றார். பின்னர் அவர், துவண்டு போகாமல் பாடல் வரிகளை எழுதி வந்தார். சுமார் 500 இற்கும் மேற்பட்ட பிரபலமான பாடல்களை எழுதியுள்ளார்

"ஒரு கதவும் கள்ளிப்பாலும்" என்ற நூலையும் எழுதி உள்ளார். மட்டும் சந்திர கற்கள் என் நாட்குறிப்பின் நடுவில் இருந்து சில பக்கங்கள் போன்ற சிறுகதை தொகுப்புகளையும் எழுதியுள்ளார்.

இவரின் திரை உலக பயணத்தை பார்க்கின்ற போது 1998 – இனியவளே – தென்றல் எந்தன் ...– முதலாவது திரைப்படம், உன்னிடத்தில் என்னை கொடுத்தேன் – மல்லிகை பூவே..., புதுமைப்பித்தன் – ஒன்னு ரெண்டு...

1999 – கள்ளழகர் – தூண்டா தூண்டா..., விரலுக்கேத்த வீக்கம் – விரலுக்கேத்த வீக்கம்..., கண்ணோடு காண்பதெல்லாம் – ஏய் குருவி..., புதுக்குடித்தனம் – நிலவுக்கு என்னடி..., உன்னருகே நானிருந்தால் – எந்தன் உயிரே...

2000 – ஜேம்ஸ் பாண்டு – வெண்ணிலா எதும்..., வீர நடை சிங்க நடை – உசுர வச்சேன் மாமா...,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறந்த பெண் பாடலாசிரியர் தாமரை!...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெனாலி – இன்சருங்கோ இஞ்சருங்கோ...

2001 – மின்னலே – வசீகரா என் நெஞ்சினிக்க..., இருவிழி உனது..., நெஞ்சை பூ போல்..., இவன் யாரோ..., பூப்போல் பூப்போல்... , மாயன் – அல்லிக்குளத்து..., ஒரு நாடு... ,நந்தா–கள்ளி அடிகள்ளி..., மேரேஜ் – ரோசா மலரே..., மஜ்னு– ஹரி கோரி..., காதலே சுவாசம்– காதலே சுவாசம்..., மனம் வலிக்குதே– சும்மா இரு...

2002 – தமிழ் – கண்ணுக்குள்ளே காதலா..., 123 – ஏப்ரல் மழை..., ஏழுமலை–் உன் புன்னகை..., ரன் – பனிக் காற்றே..., நம்ம வீட்டுக் கல்யாணம் – மின்னது மின்னுது..., ஏப்ரல் மாதத்தில் – ஏய் நெஞ்சே..., வெற்றி – அனைத்து பாடல்களும், சொக்கத்தங்கம் – வெள்ளை மனம்..., அன்பு – தவமின்றிக் கிடைத்த..., சாமி – இது தானா....

2003 – IR – நெஞ்சில் நெஞ்சில் உன்..., ஒரே ஒரு கானம்..., விசில்– அழகிய அசுரா..., காக்க காக்க – உயிரின் உயிரே..., சிறகுகள் நீளுதே... , ஒன்றா இரண்டா ஆசைகள்...., தூது வருமா...., ஒரு ஊரில்... போன்ற அனைத்து பாடல்களையும் குறிப்பிடலாம். அலை – என் ரகசிய கனவுகள்...

2004 – எங்கள் அண்ணா– முதல் முதலாக..., ஜெய் – மெதுவாய் மெதுவாய்..., புதுக்கோட்டையில் இருந்து சரவணன் – மலர்கலே மலர்களே..., தென்றல் – அடி மலர்களே..., தென்றல் – அடி தோழி..., ஜெய்– பெண்ணே..., வர்ணஜாலம் – நீ வேண்டும் நீ வேண்டும்..., காதல் டாட் காம்– இமைக் காதலா விழிகள் குத்து..., என் நிலவு..., என்னை தீண்டி விட்டாய் ..., பேரழகன் ஒரு அழகான..., அரசாட்சி – அரக் கோணத்தில் ஆரம்பம்..., ஓ மொகல்லா ஓ மொகல்லா..., ஒருமுறை சொல் லிவிடு..., எப்படி சொல்வது..., போஸ் – டோலி டோலி...

2005 – கஜினி – ஒரு மாலை..., ரங்கோலா...., சண்டைக்கோழி – கேட்டா கொடுக்கிற..., தொட்டி ஜெயா– உயிரே என்..., உயிரே யாரிடமும்..., தொட்டா பவருடா...., கண்ட நாள் முதல் – முழுப் பாடல்களும்.

2006 – வேட்டையாடு விளையாடு– பார்க்க முதல் நாளே..., நெருப்பே சிக்கி முக்கி நெருப்பே..., வெண்ணிலவே வெண்ணிலவே...(முழுப் பாடலும்) வல்லவன் – வல்லவா என்னை வெல்லாவா...

2007 – பச்சைக்கிளி முத்துச்சரம் – கரு கரு விழிகளால்..., காதல் கொஞ்சம்.., உன் சிரிப்பினிலே...

2008 – வாரணம் ஆயிரம்– அனல் மேலே பனித்துளி...., முன்தினம் பார்த்தேனே..., நெஞ்சுக்குள் பெய்திடும்..., அவ என்ன என்ன தேடி வந்த... , அடியேகொல்லுதே..., நீ இன்றி நானும் இல்லை... (முழுப்பாடல்), காதலில் விழுந்தேன் – உன் தலை முடி கூட...., உனக்கென நான்..., சொல்லடி எந்தன் இதயம்...., சுப்ரமணியபுரம் – கண்கள் இரண்டால்...

2009 – பசங்க – ஒரு வெட்கம் வருதே....

2010 – குட்டி – என் நெஞ்சை..., விண்ணைத்தாண்டி வருவாயா – அன்பில் அவன்..., ஒசானா..., உயிரே உன்னை...,ஓமணப்பெண்ணே...(முழு பாடல்)

2011 – முப்பொழுதும் உன் கற்பனை, (முழுப்பாடல்), ரௌத்திரம் – மாலை மங்கும் நேரம்..., வந்தான் வந்தான் – காஞ்சனா மாலா..., வெடி – இப்படி மழை அடித்தால்..., எங்கேயும் காதல் – லோலிட்டா....

2012 – ஆதவன் – ஏதோ ஏதோ பனித்துளி..., மாற்றான் – யாரோ யாரோ..., சுந்தரபாண்டியன் –நெஞ்சுக்குள்ள நெஞ்சுக்குள்ள....

2013 – என்றென்றும் புன்னகை– எனை சாய்த்தாலே...

2014 – யான் – நீ வந்து போனது..., இது கதிர்வேலன் காதல் – அன்பே அன்பே..., விழியே விழியே..., மேலே மேலே தன்னாலே..., இரும்புத்திரை – ஓ பெண்ணே பெண்ணே.., அன்பே இப்ப என்னசொல்கிறாய்..., பாண்டிச்சேரி..., அலைபாயும்.....

2015 – இருமுகன், ஓ மாயா, நண்பேன்டா – நீராம்பல் பூவே..., என்னை அறிந்தால் – இதயத்தை ஏதோ ஒன்று..., மழை வரப்போகுதே..., உனக்கென வேண்டும் சொல்லு..., அத்தாறு அத்தாறு..., மம்மரகதம்... (போன்ற அனைத்து பாடல்கள்), நானும் ரவுடிதான் நீயும் நானும்..., ரோமியோ ஜுலியட் – தூவானம் தூவ தூவ...

2016– கெத்து – தேன் காற்று வந்தது...ருசுரழவ் அச்சம் என்பது மடமையடா பறக்கும் ராசாளியே... , தள்ளி போகாதே...

2017– தீரன் அதிகாரம் – ஒன்று வீட்டில் நீயும் நானும்..., போகன் – செந்தூரா செந்தூரா..., தானா சேர்ந்த கூட்டம் – எங்கே என்று போவது...., சிங் கம் 3 – முதல்முறையாக பெண்ணே..., என்னை நோக்கி பாயும் தோட்டா ..., மறுவார்த்தை பேசாதே..., எதுவரை போகலாம்...

2018 – தேவ் –் ஒரு நூறு முறை..., அணங்கே நீ சிணுங்கிட, நிமிர் – நெஞ்சில் மாமழை...

2019 – சீறு – செவ்வந்தியே மது வந்தியே..., ஆதித்ய வர்மா – அமுதங்களால்..., விசுவாசம் – கண்ணான கண்ணே..., ஐரா – மேகதூதம்...

2020 – பூமி– கடைக்கண்ணாலே..., துருவ நட்சத்திரம் – ஒருமனம் நிக்கச் சொல்லுதே (படம் இன்னும் வெளியாகவில்லை)

2021 – மாறா – தீராநதி...., காத்திருந்தேன் காத்திருந்தேன்..., யார் அழைப்பது யார் அழைப்பது....

2022– வெந்து தணிந்தது காடு – மறக்குமா நெஞ்சம்..., மல்லிப்பூ வச்சு வச்சு... அனைத்து பாடல்களும், முதல் நீ முடிவும் நீ – முதல் நீ முடிவும் நீ... போன்ற பாடல்கள் இவரால் படைக்கப்பட்ட அழியா நிலைவலைகளாகும்.

இவர் வாங்கிய விருதுகள் எண்ணற்றன.

சிறந்த பாடலாசிரியர் தமிழ்நாடு மாநில திரைப்பட விருது – தெனாலி (2000).

தமிழக அரசின் கௌரவ பாவேந்தர் பாரதிதாசன் விருது – வாரணம் ஆயிரம்.

திரைப்படத்துக்காக பிலிம் பேர் பாடலாசிரியருக்கான பிலிம் பேர் விருது – கஜினி(2005), வாரணம் ஆயிரம்(2008), சுப்பிரமணியபுரம்(2008), பசங்க(2009) விண்ணைத்தாண்டி வருவாயா (2010), அச்சம் மடமையடா(2016), ஏழாம் அறிவு (2011), என்னை அறிந்தால் (2015).

சிறந்த பாடலாசிரியருக்கான ஆனந்த விகடன் விருது– வாரணம் ஆயிரம் 2008, விண்ணைத்தாண்டி வருவாயா (2010) , தள்ளி போகாதே பாடலுக்காக அச்சம் என்பது மடமையடா (2016), யார் அழைப்பது... –மாறா (2021) .

சிறந்த பாடலாசிரியருக்கான விஜய் விருதுகள்– வாரணம் ஆயிரம் 2018 , முப்பொழுதும் கற்பனை மனம்... (இன்னும் வெளியாகவில்லை) போன்ற படங்களைக் குறிப்பிட்டலாம்.

2012 சிறந்த பாடலாசிரியருக்கான விருது– காக்க காக்க 2003.

ஜீனி சினி விருதுகள் சிறந்த பாடலாசிரியர – விசுவாசம்( 2020) திரைப்படத்திற்காக கண்ணான கண்ணே பாடல்...

ஆயு சிறந்த பாடலாசிரியருக்கான விருதுகள் – அச்சம் என்பது மடமையடா, விசுவாசம் ,மாறா.

இவர் விலங்குரிமை ஆர்வலருமாவர். நம் உணவுக்காக பிற உயிர்களைக் கொல்லத் தேவையில்லை என்று நனிசைவ வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வருகிறார். பட்டுப்பூச்சிகளைக் கொண்டு உடைகளை செய்கின்றார்கள் என்பதற்காக பட்டாடைகளையே அணிய மறுத்தவர். சாதி அர்த்தமற்ற சடங்குகள் மதத்திணிப்பு, கடவுள் நம்பிக்கை, ஆடம்பரம் ஆண், பெண் பேதம், போன்ற வாதம் போன்றவற்றை எதிர்த்தவர். சமீபத்தில் இரா .கோ யோகேந்திரன் பதிவிலிருந்து மறக்குமா நெஞ்சம் படத்தில் இருந்து இவர் எழுதிய நேற்றும் இன்றும்.... என்ற திரைப்படத்தின் பாடல் 21.05.2023 அன்று ஒலிப்பதிவு துல்கர் சல்மானால் வெளியிடப்பட்டது. மேலும் இத்திரைப்படத்தில் இவர் நான்கு பாடல்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக ஒரு தமிழ் கவிஞரும் திரைப்படப் பாடலாசிரியருமான தாமரை என்ற அறிவு களஞ்சியம் தமிழ் உலகுக்குக் கிடைத்த அரும் பெரும் பொக்கிஷம் என்றுதான் சொல்ல வேண்டும். அதைக் கடந்த 25 ஆண்டு கால திரைப்பட பாடல்கள் மூலம் அவர் நிரூபித்துள்ளார்.

**திருச்செல்வம் ஜனனீ,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்





# மட்டக்களப்பு குடியிருப்பு கலைமகள் 141 ஆவது வருடத்தில் நடைபவனி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு குடியிருப்பு கலைமகள் மகா வித்தியாலயத்தின் 141ஆவது வருடத்தைச் சிறப்பிக்கும் முகமாக நேற்று சனிக்கிழமை (23) பாடசாலை பெருமை தன்னை உலகறிய செய்ய நடைபவனி இடம்பெற்றது.

மட்டக்களப்பில் குடியிருப்பு கலைமகள் மகா வித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவு செய்த ஸ்தாபகர் ஜோன் கிள்னர் அடிகளாரால் 1882 ஆண்டு பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது.

அதை சிறப்பிக்கும் முகமாக கல்லூரியின் அதிபர் எஸ்.டி. முரளிதரன் தலைமையில், இக் கல்லூரியின் பான்ட் வாத்திய அணியினரால் பான்ட் வாத்தியம் முழங்க நடை பவனி இடம்பெற்றது. பழைய மாணவர்களின் நடனங்கள், வாகன அணிகள் பொன்றன அனைவரதும் கவனத்தை ஈர்த்தன.

இதன் போது பாடசாலையின் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலையின் ஆசிரியர்கள் , பாடசாலை மாணவிகள், பாடசாலையின் பழைய மாணவிகள், பெற்றோர்கள், மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.






# மண்முனை பிரதேச பெரும்போகம் முதற்கட்டமாக ஆராய்வுக் கூட்டம்!

(பழுவூரான்)

மண்முனை தென்மேற்குப் பிரதேச பெரும்போகச் செய்கை தொடர்பான ஆரம்பக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலாளர், கமநல சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசன திணைக்கள பனிப்பாளர், வனவிலங்கு திணைக்கள உத்தியோகத்தர்கள், வன பரிபாலன சபை திணைக்கள உத்தியோகத்தர்கள், நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், காப்புறுதி நிறுவன உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



இதன்போது விவசாயிகளுக்கான மானிய தொகை வழங்கும் விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு உரிய முறையில் மானியம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த போகத்தில் உரங்களுக்காக வழங்கப்பட்ட வவுச்சரை பயன்படுத்தி இதுவரையில் உரம் பெறாதவர்கள் உரிய கமநல சேவைகள் திணைக்களத்துக்கு சென்று பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. பெரும்போக பயிர்ச்செய்கைக்கான உர விநியோகம் தொடர்பாகவும் உரிய முறையில் இடம்பெறும் எனவும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பெரும் போக பயிர்ச்செய்கைக்கான விதை நெல்கள் உரிய முறையில் உள்ளதாகவும் சிறப்பான முறையில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் உரிய திணைகள் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது.

யானை வேலிகளை பலப்படுத்தும் வேலை திட்டத்தை மிக விரைவாக ஆரம்பிக்க வேண்டும் எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.






# தியாக தீபத்துக்கு மன்னாரில் அஞ்சலி

(மன்னார் நிருபர்)

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று (23) மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசு கட்சியின் ஏற் பாட்டில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசு கட்சி அலுவலகத்தில் மாலை 4 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றி அடையாள உண்ணாவிரத போராட்டமாக அனுஷ் டிக்கப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் முக்கியஸ்தர்கள், மக்கள் கலந்து கொண்டு தியாக தீபம் திலீப னுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்



# சிறுவர் அபிவிருத்தியில் பெற்றோர்களது பங்கு!

## அம்பாறையில் விழிப்பூட்டும் வேலைத்திட்டம்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

குழந்தை வளர்ச்சியிலும் பராமரிப்பிலும் பெற்றோரின் பங்கு பற்றி அரச உத்தி யோஸ்தர்களை விழிப்பூட்டுவ தற்கான வேலைத்திட்ட மொன்று அண்மையில் அம் பாறை மாவட்ட செயலகத்தில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் குழந்தைகள் நிபு ணத்துவ உதவியாளர் கலா நிதி சமிந்த வீரசிங்க சிறப்பு வளவாளராக கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அம்பாறை வலய கல்விப் பணிப்பாளர் ,அம்பாறை மாவட்ட செயலக நிர்வாக உத்தியோஸ்தர் , அம்பாறை மாவட்ட சிறுவர் காப்புறுதி உத்தியோஸ்தர், அம்பாறை மாவட்ட பெண் பொலிஸ் உத்தியோஸ்தர்கள், அம்பாறை பிரதேச செயலக உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# பஸ்தரிப்பு நிலைய கூரை சேதம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது வரவேற்பு நுழைவாயிலுக்கு அருகில் பிரதேச வைத்தியசாலை பக்கமாக உள்ள பயணிகள் ஓய்வு பஸ்தரிப்பு நிலை யத்தின் கூரை சேதமடைந்துள்ளது. இதனால் மழை காலத்திலும் சுட்டெரிக்கும் வெயிலிலும் பஸ் ஸிற்காக காத்திருக்கும் பயணிகள் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சாய்ந்தமருதின் பிரதான கேந்திர நிலையத்தில் அமைந் திருக்கும் இந்த ஓய்வு பஸ்தரிப்பு நிலையத்தின் கூரை சேதமடைந்து பல மாதங்களாகியும் இதுவரை சீர் செய்யப்படாமல் காணப்படு கின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகளும் பயணிகளும் கேட்டுள்ளனர்.



# இந்தியா - மத்திய கிழக்கு வர்த்தக வழித்தடம் உலக வர்த்தகத்தின் அடித்தளமாக அமையும்!




## - பிரதமர் மோடி தெரிவிப்பு

இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பா வர்த்தக வழித்தடம் உலக வர்த்தகத்தின் அடித்தளமாக அமையும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி மாதம்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் அகில இந்திய வானொலியில் மனதின் குரல் எனும் நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றி வருகிறார். அதன் 105 ஆவது நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பாகியது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, சந்திரயான் -3 நேரலையை 80 லட்சத்துக்கும் மேலானோர் கண்டு ரசித்துள்ளனர். சந்திரயான் -3 வெற்றிக்குப் பின்னர் ஒவ்வொரு இந்தியருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி கொடுத்த நிகழ்வாக ஜி-20 உச்சி மாநாட்டு வெற்றி திகழ்கிறது.

ராஜ்காட்டில் உள்ள காந்தி நினைவிடத்துக்கு உலகத் தலைவர்கள் வந்து அஞ்சலி செலுத்தியது மிகப்பெரிய தருணம். காந்தியின் கொள்கைகள் இன்றளவும் பொருத்தமாக உள்ளன என்பதற்கு இது ஒரு சாட்சி.

எதிர்வரும் ஒக்டோபர் ஆம் திகதி, காந்தி ஜெயந்தி அன்று அதிகளவான சுகாதாரத் திட்டங்கள் நாடு முழுவதும் ஒருங்கிணைக்கப்பட உள்ளன.

அதேபோல் எதிர்வரும் செப்ரப்பர் 27 ஆம் திகதி சர்வதேச சுற்றுலா தினம் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி நாட்டு மக்கள் இந்தியாவின் பன்முகத் தன்மையை அறியும்படி சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

சமீபகாலமாக இந்தியா உலக சுற்றுலா தலங்களில் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பா வர்த்தக வழித்தடம் உலக வர்த்தகத்தின் அடித்தளமாக அமையும். அதற்கான முன்முயற்சி இந்திய மண்ணில் எடுக்கப்பட்டது என்பது உலக வரலாற்றில் இடன்பெறும்.

சமீபத்திய ஜி-20 உச்சி மாநாட்டில் இந்தியா – மத்திய கிழக்கு – ஐரோப்பிய ஒன்றிய பொருளாதார வழித்தடத்தை பரிந்துரைத்தேன்.

விழாக் காலத்தில் உங்கள் வீட்டுக்கு புதிதாக என்ன பொருள் வாங்க நினைத்தாலும் அது இந்தியத் தயாரிப்பாக இருக்கட்டும் என்று தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க கூட்டணியில் பா.ஜ.க. இல்லை!

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இல்லை என்று கடந்த 18 ஆம் திகதி எடுத்த முடிவில் மாற்றுக் கருத்து இல்லை என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இல்லை என்ற கருத்தில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. நாளை எம்.ஜி.ஆர் மாளிகையில், அ.தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற இருக்கிறது. கூட்டம் நடைபெறவுள்ள சூழலில் என்னால், வேறு எந்த கருத்தும் தெரவிக்க இயலாது. ஒருநாள் காத்திருந்தால், மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை ஊடகங்களில் அறிவிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மின்சார கட்டண பிரச்சினை தொடர்ந்தால் தமிழக பொருளாதாரம் வீழ்ச்சியடையும்!

## - அன்புமணி ராமாதாஸ் எச்சரிக்கை

மின்சாரக் கட்டண உயர்வைத் தாங்கிக் கொள்ள முடியாமல், சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள போராடிக் கொண்டிருக்கின்றன.

இதேநிலை தொடர்ந்தால் தமிழக பொருளாதாரம் வீழ்ச்சியடையும். வேலையில்லா பிரச்சினையும் அதிகரிக்கும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமாதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் கடந்த ஓராண்டில் அடுத்தடுத்து இரு முறை நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரக் கட்டண உயர்வு அதன் விளைவுகளைக் காட்டத் தொடங்கியுள்ளது. தொழில் மற்றும் வணிகப் பிரிவினருக் கான மின்சாரக் கட்டணம் நேரடியாகவும், மறைமுகமாகவும் உயர்த்தப்பட்டிருப்பதால் பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகரித்துளது. முதலீடு வெளியேறுதல், வேலையிழப்பு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

தமிழகத்தில் வீடுகளுக்கான மின்கட்டணம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 52 வீதம் வரை உயர்த்தப்பட்டது. தொழில் மற்றும் வணிகப் பயன்பாட்டுக்கான மின்கட்டணமும் கிட்டத்தட்ட அதே அளவில் உயர்ந்தது. அதனால், தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் கடுமையான நெருக்கடியை எதிர் கொண்டன. கடந்த ஆண்டு உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை வலியுறுத்தி வந்தது.

இந்த நிலையில், கடந்த ஜுலை மாதம் வணிகப் பயன்பாட்டுக்கான மின்கட்டணம் மீண்டும் 2.18 வீதம் உயர்த்தப்பட்டது. அதுமட்டுமின்றி, நிலையான கட்டணம், காலையிலும், மாலையிலும் 6 மணி முதல் 10 மணி வரை அதிக மின் பயன்பாட்டு நேரக் கட்டணம் என பல வழிகளின் மறைமுகமாகவும் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை சமாளிக்க முடியாத சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாளை ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டம் அறிவித்துள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

# கனடாவில் காலிஸ்தான் தீவிரவாத விவகாரம்: இந்தியாவுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும்!

## - பென்டகன் முன்னாள் அதிகாரி தகவல்




இந்திய உறவா அல்லது கனடா உறவா என முடிவெடுக்க வேண்டிய நிலை வந்தால், அமெரிக்கா இந்தியாவுக்கு தான் ஆதரவு அளிக்கும் என்று அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் தெரிவித்துள்ளார்.

கனடாவின் வான்கூவர் நகரில் காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த ஜூன் மாதம் சுட்டு கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பிருக்கிறது என கனடா பிரதமர் ஜஸ்டின் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த பிரச்சினையில் தங்களோடு இணையுமாறு அமெரிக்காவுக்கு கனடா அழைப்பு விடுத்தது. இதுகுறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் தெரிவிக்கையில், கனடாவின் இந்த குற்றச்சாட்டு, இந்தியாவை விட கனடாவுக்குத்தான் அதிக அபாயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்திய உறவா அல்லது கனடா உறவா என முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அமெரிக்கா இந்தியாவுடன்தான் துணை நிற்கும்.

இரண்டு நண்பர்களுக்கிடையில் நாம் தேர்வு செய்ய வேண்டியிருந்தால், நிஜ்ஜார் ஒரு தீவிரவாதி என்பதாலும், இந்தியா மிகவும் முக்கியமானது என்பதாலும் இந்த விஷயத்தில் இந்தியாவைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம்.

இந்தியாவுடனான உறவு எங்களுக்கு முக்கியமானது. கனடா, இந்தியாவோடு சச்சரவில் ஈடுபடுவது, ஒரு எறும்பு, யானையுடன் சண்டையிடுவது போலாகும்.

தனது குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரத்தை தர கனடா பிரதமர் ஜஸ்டினால் முடியவில்லை. இந்தியாவால் தீவிரவாதி என முத்திரை குத்தப்பட்ட ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தது எதற்காக என்பது தொடர்பாக கனடா விளக்க கடமைப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்க முன்னாள் அதிகாரி ஒருவர் பேசியுள்ளது கனடாவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.



## இந்தோ - பசிபிக் இராணுவ தளபதிகள் மாநாடு: ஆயுதங்களை காட்சிபடுத்துகிறது இந்தியா!

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில், டில்லியில் நடைபெறவுள்ள இந்தோ –பசிபிக் இராணுவ தளபதிகள் மாநாட்டில், பீரங்கிகள், ட்ரோன்கள், துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை இந்தியா காட்சிப்படுத்தவுள்ளது.

இந்தியா தற்போது 85 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இராணுவ தளபாடங்களை ஏற்றுமதி செய்து வருகிறது. இந்த ஏற்றுமதியில் 100 உள்நாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

ஏவுகணைகள், பீரங்கிகள், ராக்கெட் குண்டுகள், கவச வாகனங்கள், ரோந்து படகுகள், குண்டு துளைக்காத ஆடைகள், ரேடார்கள், கண்காணிப்பு கருவிகள் மற்றும் வெடிபொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது.

அவுஸ்ரேலியா, ஜப்பான், இஸ்ரேல், பிரேசில் உட்பட 34 நாடுகளுக்கு குண்டு துளைக்காத உடைகளை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. சுமார் 10 நாடுகளுக்கு துப்பாக்கி ரவைகளை ஏற்றுமதி செய்கிறது. அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு பாதுகாப்பு இலத்திரனியல் கருவிகளை ஏற்றுமதி செய்கிறது. இந்த நிலையில், இந்தோ–பசிபிக் இராணுவ தளபதிகள் மாநாடு டில்லியில் செப்டம்பர் 26, 27 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை இந்தியா மற்றும் அமெரிக்க இராணுவம் ஆகியவை இணைந்து நடத்துகின்றன. இதில் 20 நாடுகளின் இராணுவ தளபதிகள் உட்பட 35 நாடுகளின் இராணுவ உயர் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

## வட கொரியா மீண்டும் தென்கொரியா மீது ஏவுகணை தாக்குதல்!



வட கொரியா மீண்டும் தென் கொரியா மீது ஏவுகணைகளை ஏவியுள்ளது என தென்கொரியா இராணுவம் தெரிவித்துள்ளது.

தென்கொரிய துறைமுகத்தில் அணு ஆயுதம் கொண்ட அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலேயே இந்த ஏவுகணை தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடகொரியா தலைநகரில் இருந்து மற்றுமொரு ஏவுகணை ஒன்று ஏவப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கலமுனை ஸாஹிரா மாணவர்கள் தேசிய மட்டத்துக்குத் தெரிவு







(எம்.என்.எம்.அப்ராஸ்)

கிழக்கு மாகாண மட்ட பாடசாலை களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றிய கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலை மாணவர்கள் தேசிய மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட னர்.

கிழக்கு மாகாண மட்ட பாடசாலை களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகள் கடந்த 19ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரை கந்தளாய் லீலாரத்ன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

இதில், 20 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான 200 மீற்றர் மற்றும் 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பங்கு பற்றிய எஸ்.எம்.அஜாத் மூன்றா மிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட் டிக்கு தெரிவானார். அத்துடன், 20 வய துக்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் ஜே.புதைர் அஹ்மட் இரண்டாம் இடத்தையும், 20 வய துக்கு உட்பட்ட ஆண்களுக்கான அஞ்சல் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட போட் டிக்குத் தெரிவாகினர்.

# தேசிய மட்ட வலைப்பந்தாட்டத்தில் கொழும்பை வென்றது அம்பாறை




(வி.ரி.சகாதேவராஜா)

இளைஞர் கழக தேசிய மட்ட ஆண் களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி யில் கொழும்பு மாவட்ட அணியை வீழ்த்தி அம்பாறை மாவட்ட அணி வெற்றி வாகை சூடியது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தால் நடத்தப்பட்ட இந்தப் போட்டி மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் நேற்று (23) சனிக் கிழமை இடம்பெற்றது.

இப்போட்டிகளில் அம்பாறை மாவட்ட அணி, முதல் போட்டியில் கொழும்பு மாவட்ட அணியைத் தோற்கடித்து அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்ட அணி சார்பாக காரைதீவு ராமகிருஷ்ணா இளைஞர் அணியினர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடதக்கது.